**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 138/2024 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா. 4 |
| Name : | திரு. வெங்கடேசன் |
| Father's Name/Husband Name: | திரு. ரெங்கசாமி |
| Village : | பாண்டகபாடி |
| Taluk : | வேப்பந்தட்டை |
| Age : | 33 /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 13.11.2025

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரிகள் 1 முதல் 3 வரை ஆஜர்)**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 ருக்குமணி எனது அக்கா. அ.சா.2 அலமேலு எனது தாயார். அ.சா.3 மாலதி எனது தங்கை. எதிரிகள் அனைவரையும் தெரியும். கடந்த 01.07.2024 அன்று இரவு சுமார் 10 மணியளவில் பெரியவடகரையில் பிரச்சனை நடப்பதாக என் அக்கா எனக்கு போன் மூலமாக தகவல் சொன்னார். தகவல் கிடைத்து நான் சம்பவயிடம் சென்று பார்த்தேன்.நான் என் அக்காவை அழைத்துக் கொண்டு வீட்டிற்கு வந்து விட்டேன். நான் வீட்டிற்கு அழைத்து வரும்போது என் அக்கா அழுது கொண்டிருந்தார் அவரிடம் என்ன நடந்தது என்று சொல்லி கேட்டேன். அதற்கு என் அக்கா சுந்தரம் செருப்பு கழட்டி அடித்ததாகவும், எதிரி சுந்தரமும், பொன்னுசாமியும் தேவிடியா புண்டை நீ எல்லாம் எதற்கு உயிரோடு இருக்கு செத்துற வேண்டி தானே, ஊர் மேஞ்சி காச கட்ட வேண்டியது தானே என்று பேசியதாகவும் எதிரி பொன்னுசாமி மகன் செருப்ப கழட்டி அடிச்சதாகவும் சொன்னார். எதிரி சிவக்குமார் உன்ன கொன்னு புதைச்சா கூட யாரும்

கேட்க ஆள் யாரும் கிடையாது என்று மிரட்டியதாகவும் என்னிடம் அழுதுக் கொண்டே சொன்னார். நான் 100 எண்ணிற்கு போன் செய்து தகவல் சொன்னேன். அதன்பிறகு என் அக்கா வீட்டிலிருந்த பூச்சி மருந்தை எடுத்துக் குடித்துவிட்டார். நான் என் அக்காவை பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தோம். என் அக்கா அளித்த புகார் சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர். ப.சா.5 கார்த்திக்கேயன் எனது மாமா. அன்றைய தினம் இரவே போலிசாரிடம் சம்பவயிடத்தை அடையாளம் காட்டினேன். மறுநாள் காலை சுமார் 10 மணியளவில் போலிசார் சம்பவயிடத்தை பார்வையிட வந்தனர். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். போலிசார் சம்பவயிடத்திற்கு வந்த இடத்தை பார்த்துவிட்டு பார்வையிட்டு அங்கு வைத்து கையெழுத்து வாங்கினார்கள் அரசு மருத்துவமனையில் வைத்து அங்கு ஒரு கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர் அ.சா.ஆ2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல எனது நண்பர் சம்பவத்தை வீடியோ எடுத்து எனக்கு அனுப்பினார்கள். சம்பவம் நடக்கும்போது நான் அங்கு இல்லை என்றால் சரிதான். அ.சா.1 ருக்குமணி எனக்கு என்ன உறவுமுறை என்றால் எனக்கு அக்கா. எனது அக்கா எதிரி சுந்தரத்திடம் சீட்டு போட்டு விட்டு தவணைத்தொகையினை சரியாக கட்டாமல் இருந்து வருவதால் அந்த தொகையை எதிரிகள் கேட்பதால் எதிரிகள் மீது பொய்யாக ஜோடித்து புகார் கொடுத்துள்ளார் என்றாலும் அதை ஆதரித்து பொய்யாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. பார்வை மகஜர், வரைபடம் வரைந்ததாகவும் அதில் நான் கையெழுத்து போட்டதாகவும் சொல்வதெல்லாம் காவல் நிலையத்தில் வைத்து நடந்ததா என்றால் இல்லை வடகரையில் வைத்து நடந்தது. சம்பவம் நடந்து எத்தனை நாட்கள் கழித்து போலிசார் வரைபடம் வரைந்து விசாரணை செய்தார்கள் என்றால் சம்பவம் நடந்து மறுநாள் சம்பவயிடம் வந்து விசாரணை செய்தார்கள். சம்பவம் நடந்த பிறகு 02.07.2024 அன்று காலை 10 மணிக்கு மருத்துவமனையில் ஒரு கையெழுத்து போட்டேன். என்னுடன் வேறு யாராவது கையெழுத்து போட்டார்களா என்றால் எனது மாமா போட்டார்.

**மறு விசாரணை : இல்லை**

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.